1970 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பெண்கள் முன்வந்தால் ஆட்சேபணை இல்லை.

THIRU R. PONNAPPA NADAR: May I know from the Hon. Minister whether in the proposed recruitment of District Judges, women would be given their due share?

THE HON. THIRU S. MADHAVAN: No name has been recommended by the High Court?

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் தமிழ் நாட்டில் நெல்லை மாவட்டத்தில் முதன்முதலாக ஒரு பெண்மணி பப்ளிக் பிராஸிகியூட்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த அளவுக்கு பெண்களை முதன்முதலாக ஜட்ஜுகளாக நியமிக்கின்ற பெயரையும் இந்த அரசு தட்டிக்கொண்டு போகுமா என்று அறிய விரும்புகிறேன். டிஸ்டிரிக்ட் ஜட்ஜு போஸ்டுகளுக்கு பெண்களை நியமிப்பதற்கு இப்படிப்பட்ட சலுகைகள் வழங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் தாய் குலத்திற்கு பெருமைதரத்தக்க அளவில் ஒரு பெண் மணியை இந்தப் பதவிக்கு நியமித்து நல்ல பெயரைப் பெற்றுக் கொண்டிருப்பதாக கனம் அங்கத்தினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இப்பொழுது மாவட்ட பப்ளிக் பிராஸிகியூட்டராக நாம் நியமித்திருக்கிறோம் பெண் குலத்தைச் சேர்ந்தவரை. மாவட்ட நீதிபதியைப் பொறுத்த அளவில் அரசியல் அமைப்புச் சட்டப்படி உயர் நீதிமன்றம் சிபாரிசு செய்ய வேண்டும். இதற்கு மனுப் போடுவதிலிருந்து பெண்களைப் பொறுத்த வரையில் எந்த விதமான டிஸ்குவாலிபிகேஷனும் நாம் செய்யவில்லை.

THIRU T. MARTIN: The Hon. Minister has stated in his reply that no woman lawyer's name has been included in the list recently sent by the High Court for selection of District Judges. May I request the Hon. Minister to state the number of women lawyers who were interviewed by the Selection Committee for the selection of District Judges?

THE HON. THIRU S. MADHAVAN: The hon. Member may put a separate question.

Representation of Bar Association, Karur.

*45 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Bar Association, Karur in Tiruchirappalli District has represented to the Government about 8th March, 1970 for shifting the Sub-courts from Tiruchirappalli; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.